# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.50 (L.W.80)

| | | | |
|---|---|---|---|
| Name | வெற்றிமணி C.M. | Caste | |
| Father's Name | T.சின்ன துளசிமணி | Calling | |
| Village | அவனியாபுரம் | Religion | இந்து |
| Taluk | தெற்கு தாலுகா | Age | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06.03.2025.

(A6 absent. His absence condoned u/s 317 of Cr.P.C. petition filed and allowed. A1 to A5 present)

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 02.15 P.M.**

நான் கடைசியாக இராஜபாளையம் நீதித்துறை நடுவராக பணியில் இருந்தேன். 20.07.2022 முதல் தற்காலிக பணி நீக்கத்தில் உள்ளேன். நான் 18.09.2015 முதல் 30.04.2019 வரை வேலூர் நீதித்துறை நடுவர் எண் 3 ஆக பணியாற்றினேன்.

18.09.2015 முதல் பிப்ரவரி 2016 வரையிலயான காலக்கட்டத்தில் அக்டாமிக் பயிற்சியிலும் பின்னர் மாவட்ட Head Quarters பயிற்சியும் முடிந்து மார்ச் 2016 முதல் ரெகுலர் JM–ஆக பணியில் இருந்தேன். மே 2016 முதல் அக்டோபர் 2016 வரையிலான காலக்கட்டத்தில் JM 5 நீதிமன்றத்தில் முழு கூடுதல் பொறுப்பில் இருந்தேன்.

எனக்கு முன்னர் JM 5 நீதிமன்றத்தில் நீதிபதியாக திரு. மும்மூர்த்தி அவர்களும், பின்னர் ரேவதி அவர்களும் அதன் பின்னர் ரங்கராஜன் நீதிபதி அவர்களும், கூடுதல் பொறுப்பாக கவனித்து வந்தார்கள். மாண்புமிகு வேலூர் CJM நீதிபதியிடமிருந்து ஜுலை 2016 ம் ஆண்டு ரிமைன்டர் கடிதம் அனுப்பப்பட்டது.

மேலும் 09.08.2016 ம் தேதி மூன்றாவதாக ஒரு ரிமைண்டர் அனுப்பப்பட்டது. அதன் அடிப்படையில் பள்ளிக்கொண்டா காவல் நிலைய குற்ற எண் 158/2015 நாள் 27.06.2015 வழக்கின் இறந்துபோன ஷமீல் பாஷா என்பவரின் இறப்பு குறித்து அறிக்கை சமர்ப்பிக்க அறிவுறுத்தியதின் அடிப்படையில் மேற்படி வழக்கு கோப்பை நான் பரிசீலித்தேன்.

மாண்புமிகு நீதிபதி திரு.மும்மூர்த்தி அய்யா அவர்கள் மாண்புமிகு CJM உத்தரவு 1824/2015 27.06.2015 தேதியிட்ட உத்தரவின் படி ஷமீல் பாஷா இறப்பிற்கான காரணம் குறித்து இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை சென்று 27.06.2015 தேதி மாலை 04.15 மணி முதல் 05.15 மணி வரை இறந்த நபர்களின் உறவினர்களான அப்துல் ரகுமான், பாஷா, ஹுமாயூன், ஷாஜஹான் ஆகியோர்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பின்னர் பிரேத பரிசோதனை நடத்துவதற்கு பணி மருத்துவர்கள் வேதநாயகம், இராமலிங்கம், நரேந்தர் ஆகியோர்களின் முன்னிலையில் பிரேத பரிசோதனை மேற்கொண்டு வழக்கில் தொடர்புடைய சாட்சிகள் கௌஷ் பாஷா, அப்துல் ரகுமான், பாஷா, ஹுமாயூன், ஷாஜஹான், செந்தாமரைச்செல்வி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து வைத்திருந்தார்.

அதன் பின்னர் வழக்கு கோப்பை நான் பரிசீலித்து வழக்கில் தொடர்புடைய மற்ற சாட்சிகளான மருத்துவர் சரவணகுமார், மருத்துவர் கே.வி. சரவணன், மருத்துவர் இராமலிங்கம், மருத்துவர் வேதநாயகம், மருத்துவர் ஆர். நரேந்தர், தனியார் தங்கும் பெண்கள் விடுதி உரிமையாளர் துளசி, சாட்சி முரளி என்ற கே.கே. சீனிவாசன், புகழேந்தி, சாட்சி அமுதா, சாட்சி பழனி, சாட்சி பவித்ரா, கலீல், சாட்சி முஷ்டாரிக் அசீன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

இறந்த ஷமீல் பாஷாவின் பிரேதம் 27.06.2015–ம் தேதியில் மாலை 05.45 மணி முதல் இரவு 07.45 மணிவரை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை சென்னைக்கு மருத்துவர்கள் வேதநாயகம், இராமலிங்கம், நரேந்திரன் ஆகியோர்களால் பிரேத பரிசோதனை நடத்தப்பட்டது.

27.06.2015 அன்று நீதிமன்றத்திற்கு கிடைக்கப்பெற்று இராசாயன பரிசோதனை அறிக்கை மற்றும் இதர மருத்துவ அறிக்கை கிடைக்கப்பெறாததால் இறப்பிற்கான காரணம் நிறுத்தி வைக்கப்பட்டு பின்னர் மேற்படி அறிக்கைகள் 25.07.2015 கிடைக்கப்பெற்றுள்ளது.

பிரேத விசாரணை அறிக்கையில் இறந்த நபரின் உடலில் வெளிப்புறத்தில் வலது கை முட்டியில் காயமும், வலது கை முழங்கையில் காயமும், வலது புற மார்பில் வீக்கமும், இடது இடுப்பில் கன்றிய காயமும், இடது பக்க முதுகில் கன்றிய காயமும், வலது தோள்பட்டையில் கன்றிய காயமும், வலது பக்க அக்குலில் காயங்கள் இருந்ததாகவும், அந்த காயங்கள் குச்சி மற்றும் தடியால் ஏற்பட்டிருக்கலாம் என்றும் சிராய்ப்பு காயங்கள் கடினமான ஒரு பொருளால் ஏற்பட்டிருக்கலாம் என்று மாண்புமிகு நீதிபதி

திரு.மும்மூர்த்தி அவர்கள் தெரிவித்ததின் அடிப்படையில் மேற்படி சாட்சிகள் நீதிமுறையிலான விசாரணையில் தெரிவித்துள்ள வாக்குமூலங்களின் அடிப்படையிலும் இறந்த நபரின் உள்ளுறுப்புகளுக்கான இராசயன பரிசோதனை அறிக்கை மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் மருத்துவர்கள் தெரிவித்த இறுதி கருத்துரையின் அடிப்படையில் இறந்த நபர் அவருக்கு ஏற்பட்ட பல்வேறு விதமான ஊமைக்காயங்களின் விளைவாக இறந்துள்ளார் என்றும், மேற்படி நபர் பவித்ரா என்ற பெண் காணாமல் போன வழக்கு விசாரணைக்காக பள்ளிக்கொண்டா காவல் ஆய்வாளர் மார்டின் பிரேம்ராஜ் அவர்களாலும், செம்மரக்கடத்தலுக்கான சிறப்பு காவல் படையில் இருந்த இதர குற்றம்சாட்டப்பட்டவர்களால் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திலும், பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு வெளியே சட்ட விரோதமாக அழைத்துச்சென்று காவலர் குடியிருப்பிலும் இறந்த நபரை அரை நிர்வாணமாக்கி கயிறால் கையை கட்டி காணாமல் போன பெண் குறித்த தகவல்களை சேகரிப்பதற்காக தாக்கியதில் குச்சி போன்ற ஆயுத்ததால் தாக்கியதில் மேற்படி நபருக்கு ஏற்பட்ட கன்றிய காயங்கள் மற்றும் சிராய்ப்பு காயங்கள் மற்றும் இறந்த நபரின் உள்ளுறுப்புகளான நுரையீரல், கல்லீரல், இதயம், மூளை, மண்ணீரல் மற்றும் நரம்பு மண்டலங்களில் ஏற்பட்ட இரத்த காயத்தினால் இந்த இறப்பு ஏற்பட்டது என்று நான் முடிவு செய்து எனது அறிக்கையை மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அய்யா அவர்களுக்கு அனுப்பினேன். மேற்படி 01.09.2016 அன்று நான் தயாரித்த அறிக்கை அ.த.சா.ஆ.7.

சாட்சிகள் மருத்துவர் சரவணகுமார், மருத்துவர் சரவணன், மருத்துவர இராமலிங்கம், மருத்துவர் வேதநாயகம், மருத்துவர் நரேந்தர், ஆகியோர்களின் வாக்குமூலங்கள் மற்றும் சாட்சிகள் துளசி அளித்த வாக்குமூலம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட வாணிவேனி பெண்கள் தங்கும் விடுதி உரிமம், சாட்சி முரளி என்ற கே.கே. சீனிவாசன் அளித்த வாக்குமூலம், சாட்சி புகழேந்தி அளித்த வாக்குமூலம், சாட்சி அமுதா அளித்த வாக்குமூலம், சாட்சி பழனி அளித்த வாக்குமூலம் மற்றும் அவர் சமர்ப்பித்த மாண்புமிகு நீதிமன்ற HCP உத்தரவு, சாட்சி பவித்ரா அளித்த வாக்குமூலம், இறந்த ஷமீல் பாஷாவின் மனைவி சாட்சி முஷ்தாலிக் தசீன் அளித்த வாக்குமூலம் மற்றும் அவர் சமர்ப்பித்த ஷமீல் பாஷாவின் மருத்துவ ஆவணங்கள் மற்றும் இறந்த ஷமீல் பாஷா ஆம்பூர் நகர காவல் ஆய்வாளருக்கு எழுதிக்கொடுத்த கடிதம் மற்றும் இரண்டு போட்டோ நகல்கள் ஆகியவற்றை சமர்ப்பித்தார். மேலும் சாட்சி கலீல் வாக்குமூலம் ஆகிய வாக்குமூலங்களை நான் பதிவு செய்து மேற்படி ஆவணங்களை விசாரணையின்போது சாட்சிகளிடமிருந்து நான் பெற்றுக்கொண்டேன்.

மேலும் மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவரிடமிருந்து எனக்கு வழங்கப்பட்ட இரண்டு ரிமைண்டர் கடிதங்கள் அடங்கிய விசாரணை அறிக்கை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள கோப்பு அ.த.சா.ஆ.75. (அது 77 தாள்கள்).

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

கேள்வி: மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் ஒரு ஆட்கொணர்வு மனு போடும்போது அந்த எல்லைக்குட்பட்ட காவல் நிலையத்திற்கு அந்த செய்தி வருமா என்றால்?

பதில்: வரும்.

கே: மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் HCP. No.1373/2015 வழக்கின் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகாரை நான் பார்த்தேனா என்றால் ?

ப: பார்த்தேன்.

கே: Woman missing புகாரின் தேதியை பார்த்தேனா என்றால் ?

ப: பார்த்தேன்.

கே: அந்த Woman missing புகாரின் தேதியிலிருந்து HCP தாக்கல் செய்யும்வரை என்ன நடந்தது என்ற விவரத்தை காவல் நிலைய பொது நாட்குறிப்பேட்டில் பதிய வேண்டுமா என்றால்?

ப: பதிய வேண்டும்.

கே: 26.05.2015 தேதியின் பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொது நாட்குறிப்பேட்டை நான் பார்த்தேனா என்றால் ?

ப: இல்லை. அது Woman missing case என்பதால் அது பற்றி நான் பார்க்கவில்லை.

கே: குற்ற எண் 158/2015 முன்பு வரையான பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொது நாட்குறிப்பேட்டின் பதிவுகளை நான் பார்த்தேனா என்றால் ?

ப: 15.06.2015–லிருந்து 19.06.2015 வரைக்கான மேற்படி காவல் நிலைய பொது நாட்குறிப்பேட்டின் பதிவுகளை பார்த்தேன்.

கே: குற்ற எண் 140/2015 தொடர்பாக மேலே கண்ட இடைப்பட்ட தேதிகளில் யார் யாரை விசாரித்ததாக அதில் பதிவுகள் உள்ளதா என்றால் ?

ப: அது குறித்த விவரங்கள் காணப்படவில்லை.

(இடைவேளை நேரம் 03.20)

(இடைவேளை முடிந்து மீண்டும் விசாரணை தொடங்கிய நேரம் 03.40)

கே: HCP.No.1373/2015 பழனி என்பவர் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் பாரா 5ல் பவித்ரா காணாமல் போனது தொடர்பான வழக்கை யார் விசாரித்ததாக சொல்லியுள்ளார் என்றால்?

ப: எஸ்.எஸ்.ஐ ரவி விசாரித்ததாக சொல்லியுள்ளார். எனவே அந்த பிராமாண வாக்குமூலத்தின் நகல் வழக்கு கோப்பில் உள்ளவாறு எ.த.சா.ஆ.9 ஆக குறியிடப்படுகிறது.

கே: பவித்ரா காணாமல் போனது குறித்து எஸ்.எஸ்.ஐ ரவி விசாரித்ததாக பழனி தனது பிரமாண வாக்குமூலத்தில் (Affidavit) கூறியிருப்பதால் அது குறித்து பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொதுநாட்குறிப்பேட்டில் பதிவுகள் ஏதேனும் உள்ளதா என்றால் ?

ப: Woman missing case பொறுத்து நான் பார்க்கவில்லை. எனது Custody case பொறுத்துதான் பார்த்தேன்.

கே: குற்ற எண் 140/2015 தொடர்பான அனைத்து ஆவணங்களையும் பார்த்திருக்க வேண்டும் என்றும் அதை பார்த்தேனா இல்லையா என்றால்?

ப: நீதிமன்றத்திற்கு Woman missing case தொடர்பாக வந்த ஆவணங்களை மட்டும்தான் பார்வையிட்டேன். காவல் நிலையத்தில் உள்ள ஆவணங்களை பார்க்கவில்லை

கே: குற்ற எண் 158/2015 தொடர்புடைய என்னென்ன ஆவணங்களை நான் பார்த்தேன் என்றால் ?

ப: 15.06.2015 முதல் 19.06.2015 வரைக்கான காவல் நிலைய பொதுநாட்குறிப்பேடு, PSR, Sentry Relief Book, காவல் நிலையத்தில் அன்றைய தேதியில் Arrest Card Book ஆகியவற்றை பார்த்தேன்.

கே: பொதுநாட்குறிப்பேட்டில் குற்ற எண் 158/2015 ல் யார் யாரை விசாரித்தார்கள் என்று இருக்கிறது என்றால் ?

ப: அது தொடர்பான பதிவுகள் ஏதும் அதில் இல்லை. அது Willful அக Suppress செய்யப்பட்டுள்ளது.

கே: Suppress செய்யப்பட்டுள்ளதாக என்னுடைய அறிக்கையில் எங்கே குறிப்பிட்டுள்ளேன் என்றால் ?

ப: Suppress என்ற வார்த்தை அதில் இல்லை.

கே: உங்களால் பதிவு செய்யப்படடுள்ள வாக்குமூலங்களில் Suppress செய்யப்பட்டுள்ளதாக யாராவது வாக்குமூலம் அளித்துள்ளார்களா என்றால்?

ப: இறந்த நபரின் தந்தை மற்றும் மாமனார் அளித்த வாக்குமூலங்களில் இறந்த ஷமீல் பாஷாவை பவித்ரா காணாமல் போன வழக்கு விசாரணைக்காக காவல் நிலையத்தில் சிறப்பு காவல் ஆய்வாளர் திரு.ரவி அவர்கள் அழைத்துச்சென்றதாவும் ரவி அவர்கள் அழைத்து சென்று ஆஜர் செய்ததாகவும் ரவி இறந்த நபரை விசாரணைக்காக காவல் ஆய்வளார் மார்டின்

பிரேம்ராஜ் அவர்களிடம் விசாரணைக்காக ஒப்படைத்ததாகவும் சாட்சிகள் என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் காவல் துறையினர் அந்த விவரங்களை பொது நாட்குறிப்பேட்டில் பதியவில்லை என்பதை நான் யூகித்துக்கொண்டேன்.

கே: உங்களால் குறியிடப்பட்ட அ.த.சா.ஆ.75 அறிக்கையில் பொது நாட்குறிப்பேட்டில் Suppress செய்யப்பட்டது என்ற வார்த்தை உள்ளதா என்றால் ?

ப: சாட்சியின் வாக்குமூலங்களில் அவ்வாறு காணப்படவில்லை.

கே: குற்ற எண் 140/2015 மற்றும் குற்ற எண் 158/2015 பதிந்த காலக்கட்டத்தில் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பு அதிகாரி யார் என்றால் ?

ப: எஸ்எஸ்ஐ ரவி ஆவார்.

கே: என்றைய தேதியில் பொது நாட்குறிப்பேட்டை பார்த்தேன் என்றால் ?

ப: மே 2016 முதல் செப்டம்பர் 2016 வரை காலக்கட்டத்தில் பார்த்தேன்.

கே: பொது நாட்குறிப்பேட்டை யார் எனக்கு கொண்டு வந்து காண்பித்தார்கள் என்றால் ?

ப: அது நான் கூடுதல் பொறுப்பில் பணியாற்றிய நீதிமன்றத்தில் இருந்தது.

கே: P.W.48, கருணாநிதி அவர்கள் சிபிசிஐடிக்கு அளித்த வாக்குமூலத்தில் பள்ளிக்கொண்டா காவல் நிலைய ஆவணங்களை தலைமை காவலர் பரத் மற்றும் நந்தகுமார்

மற்றும் காவல் ஆய்வாளர் கோவிந்தசாமி அவர்கள் முன்னிலையில் நிலைய ஆவணங்களை மகஜரில் 01.07.2015 அன்று இரவு 10.00 மணிக்க கைப்பற்றினேன் என்று இருக்கிறது என்றால் ?

ப: சரிதான்.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொது நாட்குறிப்பேட்டையோ அல்லது பிற ஆவணங்களையோ பார்க்காமலேயே எதிரிகளின் பணி நிலை குறிப்பாக சம்பவ நாளன்று எங்கு பணியாற்றினார்கள் என்ற விவரத்தை ஆவணங்களின் மூலம் தெரிந்துக்கொள்ளாமலேயே ஒரு பொய்யான அறிக்கையை கொடுத்திருக்கிறீர்கள் என்றால் ?

ப: சரியல்ல.

கே: சம்பவ இடத்திற்கு நான் சென்றேனா என்றால் ?

ப: நான் இந்த வழக்கில் விசாரணை செய்த காலக்கட்டத்தில் அந்த குடியிருப்பு இடிக்கப்பட்டது என்றும் அது அங்கு இல்லை என்பதால் நான் அங்கு செல்லவில்லை.

கே: அந்த குடியிருப்பு இடிக்கப்பட்டது அதனால் நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்று என்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் ?

ப: குறிப்பிடவில்லை.

கே: தங்களால் குறிப்பிடப்படும் குடியிருப்பு இருந்ததற்காகவோ அல்லது இடித்தற்காகவோ இடப்பட்ட ஆணையினை தங்களின் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறீர்களா என்றால் ?

ப: நான் விசாரித்த சாட்சிகள் யாரும் அது குறித்து சொல்லவில்லை.

கே: அ.த.சா.ஆ.27, 14.07.2017 தான் வந்துள்ளது, அதனால் பார்க்க வேண்டிய ஆவணங்களை பார்க்காமலேயே நான் அறிக்கை தயாரித்தேன் என்றால் ?

ப: சரியல்ல.

கே: மருத்துவர் சரவணகுமாருக்கு அழைப்பாணையை கடிதம் எந்த தேதியில் யார் மூலமாக கொடுத்தேன் என்றால் ?

ப: 12.08.2016 ல் பதிவு தபால் அனுப்பப்பட்டது.

கே: RPAD மூலமாக அனுப்பப்பட்டதாக தங்களின் கடித நாள் 12.08.2016 ல் உள்ளதா என்றால் ?

ப: பள்ளிக்கொண்டா காவல் நிலைய அப்போதைய நீதிமன்ற போலீஸ் தெய்வானை மூலம் சம்மன் சார்வு செய்யப்பட்டது. போலீசார் சார்வு செய்ய முடியாத சூழ்நிலையில் தபால் RPAD மூலம் அனுப்பப்படும்.

கே: மருத்துவர் கே.வி. சரவணனுக்கு அழைப்பாணை எவ்வாறு அனுப்பப்பட்டது என்றால் ?

ப: அவருக்கும் போலீசார் மூலமாக அனுப்பப்பட்டது.

கே: மருத்துவர் சரவணனுக்கு சம்மன் அனுப்பப்பட்டது தொடர்பான ஆவணங்கள் ஏதேனும் வழக்கு கோப்பில் உள்ளதா என்றால் ?

ப: வழக்கு கோப்பில் இல்லை.

கே: அதற்கான விடுவி எண் ஏதேனும் உள்ளதா என்றால் ?

ப: இல்லை.

கே: மருத்துவர் இராமலிங்கம், சென்னை அவர்களுக்கு சம்மன் எப்போது அனுப்பப்பட்டது என்றால் ?

ப: மருத்துவர் இராமலிங்கத்திற்கு அழைப்பாணையை காவலர் மூலம் சார்வு செய்ய முற்பட்டபோது அவர்கள் 29.08.2016 அன்று மாற்று பணி இருப்பதாகவும் நீதின்றத்திற்கு வர இயலாது என்று வாய்மொழியாக தெரிவித்ததாகவும் பின்னர் பொதுமான அளவு கால அவகாசம் இல்லை என்பதால் அன்றைய தேதியில் சாட்சியாக ஆஜர் ஆக இயலாது என்பதால் சாட்சிப் பிடியாணை பிறப்பிக்கப்படும் என்று காவலர்கள் தெரிவித்ததால் நேரடியாக சாட்சி நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்துவிட்டார்.

கே: மேற்படி செய்தியை முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் ?

ப: சரிதான். சாட்சி அன்றைய தினம் நேரடியாக வந்து சாட்சியம் அளித்ததால் அன்றே சம்மன் சார்வு செய்யப்பட்டது. பின்னிட்டு சாட்சி நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டது.

கே: எல்லா சாட்சிகளையும் நீதிமன்ற சாட்சிக்கூண்டில் ஏற்றி சாட்சியம் பெறப்பட்டதா என்றால் ?

ப: கூண்டில் ஏற்றிதான் விசாரித்தேன். நீதிமன்றத்தில் In–camera நடவடிக்கை மூலம் விசாரித்தேன்.

கே: In–camera நடவடிக்கை மூலம் சாட்சியம் பதிவு செய்யப்பட்டால் என்னென்ன விதிமுறைகள் கடைபிடிக்கப்பட வேண்டும் என்றால் ?

ப: நீதிமன்ற ஊழியர்கள் மற்றும் சாட்சிகளை தவிர்த்து மற்ற நபர்களை நீதிமன்றத்திற்கு வெளியே அனுப்பிவிட்டு நீதிமன்ற கதவுகளை சாத்தி சாட்சியின் விசாரணை பதிவு செய்யப்படும்.

கே: மாண்புமிகு மும்மூர்த்தி, நீதித்துறை நடுவர் (பொறுப்பு) எண். 5 அவர்கள் இறுதியாக பிரேத விசாரணை சாட்சிகளை எந்த தேதியில் விசாரணை செய்தார் என்றால் ?

ப: 15.07.2015 என்று ஆவணங்களில் காணப்படுகிறது.

கே: 15.07.2015 க்கு பின்னிட்டு நீதித்துறை நடுவர் எண் 5 ஆக பொறுப்பேற்றவர்கள் ஏன் விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை என்பதற்கான காரணம் கோப்புகளில் பதிவு செய்யப்பட்டுள்ளனவா என்றால் ?

ப: கோப்புகளில் பதிவு இல்லை. புதியதாக பொறுப்பேற்ற நீதித்துறை நடுவர்கள் பயிற்சிக்கு சென்றுவிட்டதால் கால தாமதம் ஏற்பட்டது.

கே: புதியதாக பொறுப்பேற்ற நீதிபதிகள் பயிற்சிக்கு செல்லும்போது யார் பொறுப்பு நீதிபதியாக இருந்தார்கள் என்றால் ?

ப: அது குறித்து எனக்கு தெரியாது. ஆவணங்களை பார்வையிட்டால்தான் சொல்ல இயலும்.

கே: பயிற்சிக்கு நீதிபதிகள் சென்றதாக சொல்லும் காலத்தில் விசாரணை கோப்பு யாருடைய பொறுப்பில் இருந்தது என்றால் ?

ப: அந்த நேரத்தில் எந்த நீதிபதி கூடுதல் பொறுப்பில் இருந்தாரோ அவரது பொறுப்பில் அந்த கோப்பு இருக்கும்.

கே: தாங்கள் விசாரணை அறிக்கையை தயார் செய்யும்போது பழைய கோப்பினை தொடர்ந்து பார்வையிட்டு தொடர்ச்சியாக எழுதினீர்களா அல்லது புதிய கோப்பு தயாரித்து எழுதினீர்களா என்றால் ?

ப: நினைவில்லை.

கே: என்னுடைய விசாரணை அறிக்கையில் கோப்பு எண் ஏதாவது உள்ளதா என்றால் ?

ப: இல்லை. காரணம் முதலில் கோப்பு ஆரம்பிக்கும்போது பொதுவாக Crl.M.P. எண் கொடுப்பார்கள் ஆனால் இந்த கோப்புக்கு அவ்வாறு எண் கொடுக்காததால் நானும் எந்த ஒரு எண்ணையும் கொடுக்காமல் குற்ற எண்னை வைத்தே விசாரணையை முடித்தேன்.

கே: அந்த அறிக்கையை யாருக்கு அனுப்பினேன் என்றால் ?

ப: தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு அனுப்பினேன்.

கே: அந்த அறிக்கையில் CJM முகவரியிட்டு கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் ?

ப: இல்லை. ஆவணங்கள் Dispatch Register ல் பதிவு செய்யப்பட்டு CJM க்கு அனுப்பி வைக்கப்பட்டது.

கே: CJM–க்கு அனுப்பிய கடிதத்தில் Received என்று உள்ளதா என்றால் ?

ப: இல்லை.

கே: அ.த.சா.ஆ.75 ல் 63 வது தாளில் ஷமீல் பாஷாவின் மருத்துவ ஆவணத்தில் வட்டமிட்ட இடத்தில் என்ன உள்ளது என்றால் ?

ப: Absconded என்று எழுதி வட்டமிடப்பட்டுள்ளது. பின்னர் 66 வது தாளில் Patient was in male ward morning rounds to cancel absconding என்று குறிக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலேயும் During rounds patient not found in ward என்று உள்ளது அதைத்தான் cancel என்று பின்னிட்டு எழுதியுள்ளார்கள்.

கே: அ.த.சா.ஆ.75 ல் 63 வது தாளின் பின் பக்கத்தில் Absconded என்று உள்ள இடத்தில் Absconded cancel என்று ஏதேனும் குறிப்புகள் உள்ளனவா என்றால் ?

ப: இல்லை.

கே: அ.த.சா.ஆ.75 ல் தாள் 65 Printed form என்றால் ?

ப: Printed form தான் அதில் கையால் எழுதப்பட்டுள்ளது.

கே: தாள் 66 Printed form இல்லாமல் கையால் எழுதப்பட்டுள்ளது என்றால் ?

ப: அந்த சரிதான்

கே: அந்த தாள் 66 ல் வெள்ளைத்தாள் எதற்காக இணைக்கப்பட்டுள்ளது என்பதை என்னிடம் அந்த ஆவணத்தை கொடுத்தவரிடம் கேட்டேனா என்றால் ?

ப: கொடுத்த ஆவணத்தை வாங்கி இணைத்துக்கொண்டேன்.

கே: அதை யார் கொடுத்தார்கள் என்றால் ?

ப: மருத்துவர்கள் கொடுத்தார்கள்.

கே: அந்த ஆவணத்தின் அசலை பார்த்தேனா என்றால் ?

ப: இல்லை.

கே: அன்றைய தினம் மாலை 04.00 மணிவரை Patient male ward–ல் இருந்தார் என்பதை உறுதி செய்ய தாள் 66–ல் ஏதேனும் மருத்துவர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் ?

ப: இல்லை.

கே: 01.09.2016 தேதியிட்ட அறிக்கையில் சாட்சியால் கொடுக்கப்பட்ட மருத்துவ ஆவணங்களில் திருத்தப்பட்டிருக்கிறதா என்பது குறித்தோ அல்லது Patient absconding குறித்தோ விசாரித்ததாக

ஏதேனும் தாங்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறீர்களா என்றால் ?

ப: இல்லை.

கே: 01.07.2015 அன்று ஆய்வாளர் திரு.கோவிந்தசாமியால் நீதித்துறை நடுவர் எண் 5 (பொறுப்பு)க்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் வரிசை எண் 16 ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணம் என்ன என்றால் ?

ப: அலி அக்பர் முதல் புகார் மனு.

கே: நான் விசாரணை செய்வதற்கு முன்பே இந்த புகார் மனு நீதிமன்றத்திற்கு வந்துவிட்டதால் முதல் புகார் மனுவில் முதல் தகவல் அறிக்கை பதிந்தீர்களா என்று நான் ஆய்வாளர் திரு.கோவிந்தசாமி அவர்களை கேட்டேனா என்றால் ?

ப: இல்லை.

கே: குற்ற எண் 158/2015 க்கு உரிய புகாரினை தாங்கள் பார்த்தீர்களா என்றால் ?

ப: பார்த்தேன்.

கே: தங்களிடம் காட்டப்படும் அ.த.சா.ஆ.1 ல் புகார்தாரர் தேதி போட்டுள்ளாரா என்றால் ?

ப: புகார்தாரரால் தேதி குறிப்பிடப்படவில்லை.

கே: ஆய்வாளர் கோவிந்தசாமி 27.06.2015 ல் பெற்பட்டதாக சொல்லப்படும் புகாரில் எந்த இடத்திலிருந்து புகார் பெறப்பட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார் என்றால் ?

ப: இடம் குறிப்பிடப்படவில்லை.

கே: அ.த.சா.ஆ.1 புகார் யாருக்கு முகவரியிடப்பட்டிருக்கிறது என்றால்?

ப: காவல் துணைக்கண்காணிப்பாளர், ஆம்பூர் அவர்களுக்கு முகவரியிடப்பட்டிருக்கிறது.

கே: அந்த புகாரில் டிஎஸ்பி ஆய்வாளருக்கு Forward செய்ததற்கான குறிப்பு உள்ளதா என்றால் ?

ப: இல்லை.

கே: முதல் புகார் ஒன்று இருப்பது தெரிந்தும் இரண்டாவது புகாருக்கு முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது தெரிந்தும் அவைகளை ஆய்வு செய்யாமல் அது பற்றி எதுவும் உங்கள் விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறீர்களா ?

ப: முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில்தான் விசாரணை செய்தேன்.

கே: இரண்டு புகார்களை குறித்து உங்களது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறீர்களா என்றால் ?

ப: இல்லை.

கே: 27.06.2015 ஆய்வாளர் கோவிந்தசாமியால் புகார்தாரரான கே.எம். அலி அக்பரிடமிருந்து பதிவு செய்யப்பபட்ட கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலம் நடுவர் நீதிமன்றத்திற்கு 01.07.2015 அன்றே வந்திருக்கிறது அதை தாங்கள் படித்து பார்த்தீர்களா என்றால் ?

ப: படித்து பார்த்தேன்.

கே: மேற்கண்ட அலி அக்பருடைய மேற்கண்ட வாக்குமூலத்தில் கீழிருந்து மேலாக 14 வது வரியிலிருந்து "இது சம்பந்தமாக நான் நடவடிக்கை எடுக்க சொல்லி ஆம்பூர் நகர காவல் நிலையத்திடம் வந்திருந்த பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தினுடைய

பொறுப்பு ஆய்வாளர் வேப்பங்குப்பம் காவல் ஆய்வாளராகிய தங்களிடம் அந்த புகார் கொடுத்து அந்த புகார் த.மு.மு.க. கட்சியை சேர்ந்த ஆம்புர் எம்.எல்.ஏ. அஷ்லாம் பாஷாவுடன் இருக்கும் த.மு.மு.க முக்கிய பொறுப்பில் உள்ள ஷமீல் அகமது என்பவர் யாருடைய பேச்சையோ கேட்டுக்கொண்டு சிறிய துண்டுச்சீட்டில் எழுதியிருந்த பெயர்களை சேர்த்து எழுதி கொண்டு வந்து ஒரு கையில் பிடித்துக்கொண்டே அதில் என்னை கையெழுத்து போடச்சொல்லி என்னை கட்டாயப்படுத்தி கையெழுத்து போடவைத்தனர் அந்த மனுவையும் தங்களிடம் கொடுக்க வைத்தனர் அந்த ஷமீல் அகமது த.மு.மு.க கட்சியை சேர்ந்தவர் காவல் நிலையத்திற்கு எதிரே ஆயிரம் முஸ்லிம்களை ஒன்றுக்கூட்டி பேப்பர் டிவிகளுக்கு அவரே பேட்டி அளித்தார்" என்று இருக்கிறதா என்றால் ?

ப: அந்த வாக்குமூலத்தில் அவ்வாறு காணப்படுகிறது. ஆனால் அதை நான் எடுத்துக்கொள்ளவில்லை. சாட்சி என் முன்னிலையில் கொடுத்த வாக்மூலத்தின் அடிப்படையில் நான் அறிக்கை கொடுத்தேன். போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தை நான் பரிசீலிக்கவில்லை.

கே: குற்ற எண் 158/2015 வழக்கினுடைய அனைத்து ஆவணங்களையும் பரிசீலனை செய்யாமல் சிபிசிஐடி போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஒன்றாம் எதிரியால் காயப்படுத்தப்பட்டு ஷமீல் பாஷா இறந்துபோனார் என்று பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் ?

ப: சரியல்ல.

கே: மேற்கண்ட வழக்கு தொடர்பான பல்வேறு ஆவணங்களை பரிசீலனை செய்த நீங்கள் பல உண்மைகளை அறிக்கையில் குறிப்பிடாமல் காவல் துறை சிபிசிஐடிக்கு ஆதரவாக ஒரு அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறீர்கள் என்றால் ?

ப: நீங்கள் சொல்வது தவறானது.

கே: உங்களால் காலம் கடந்து தனி நபர்களை அழைத்து வாக்குமூலம் பதிவு செய்தது அதனுடைய முறை ஆகியவை சட்டத்திற்கு புறம்பானது சிபிசிஐடி கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவ்வாறு செய்திருக்கிறீர்கள் என்றால் ?

ப: சரியல்ல.

கே: தங்களால் காலம் கடந்து சாட்சிகளை அழைத்து நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் சட்டத்திற்கு புறம்பானவை அவைகள் செல்லத்தக்கன அல்ல என்றால் ?

ப: சரியல்ல.

கே: 1ம் எதிரி மார்டின் பிரேம்ராஜ் சம்பவ காலத்தில் எங்கு பணி செய்தார் யாருடன் பணி செய்தார் என்பதை ஆவணங்களின் மூலம் தெரிந்துக்கொண்டிர்களா என்றால் ?

ப: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் அவர்தான் பொறுப்பு அதிகாரியாக இருந்தார்.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கும் வேறு சில காவல் நிலையங்களுக்கும் 1ம் எதிரி மார்டின் பிரேம்ராஜ் சர்கில் இன்ஸ்பெக்டராக பணியாற்றினார் அதனால் சம்பவ காலத்தில் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் பொறுப்பாக இருந்த எஸ்எஸ்ஐ ரவி என்பது கூட தெரியாமல் தாங்கள் இந்த

நீதிமன்றத்தில் பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால் ?

ப: சரியல்ல.

கே: 1ம் எதிரி மார்டின் பிரேம்ராஜ் செம்மரக்கடத்தல் தொடர்பான கொலை வழக்கு ஒன்றில் சிறப்பு குழு என்ற முறையில் பொறுப்பேற்று செயல்பட்ட டிஎஸ்பி கணேசன் என்பவரிடம் 15.06.2015 முதல் 19.06.2015 வரை பணியாற்றினார் என்பதைக்கூட தெரிந்துக்கொள்ளாமல் இந்த நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ?

ப: சரியல்ல.

கே: தங்களிடம் வாக்குமூலம் அளித்த மருத்துவர் குச்சியால் அடித்ததாகவோ கட்டையில் அடித்ததாகவோ குறிப்பிட்டு எதுவும் அவர்களது அறிக்கையில் சொல்லவில்லை ஆனால் தாங்கள் வேண்டுமென்றே சிபிசிஐடி கேட்டுக்கொண்டதற்கு இணங்க நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறிர்களா என்றால் ?

ப: சரியல்ல.

கே: 19.06.2015 மதியம் 01.00 மணிக்கு நல்ல முறையில் ஷமீல் பாஷாவை அழைத்துச்செல்கிறோம் தேவைப்படும்போது முன்னிலை செய்கிறோம் என்று எழுதிக்கொடுத்துவிட்டு அதே கௌஸ் பாஷா (ஷமீல் பாஷாபின் மாமனார்) ஆம்பூர் மருத்துவமனையில் மாலை 04.30 மணிக்கு உள்நோயாளியாக சேர்த்திருப்பதனால் ஷமீல் பாஷாவுக்கு ஏற்பட்ட எந்த காயத்திற்கும் எதிரிகள் பொறுப்பானவர்கள் அல்ல என்பதை ஆவணங்கள் மூலம் தெரிந்துக்கொள்வதற்கான அனைத்து ஆவணங்களும் இருக்கிறபோது அவைகளை பார்க்காமல்

தாங்கள் அறிக்கை செய்திருக்கிறீர்கள் என்றால் ?

ப: சரியல்ல.

கே: 19.06.2015 உள்நோயாளியாக ஆம்பூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஷமீல் பாஷா இரவே அந்த மருத்துவமனையிலிருந்து காணாமல் போனதை காலை விபத்து சிகிச்சை பிரிவிலிருந்து காணாமல் போனவர் அடுத்த நாள் மாலை 04.00 மணி வரை எங்கிருந்தார் என்பதை எவராலும் சொல்ல முடியாத ரகசியத்தை ஆவணங்களின் மூலம் தாஙகள் தெரிந்துக்கொள்வதற்கு அனைத்து ஆவணங்களும் கையில் இருந்தபோதும் அவைகளை குறிப்பிட்டு எழுதால் சிபிசிஐடிக்கு ஆதரவாக அறிக்கை சமர்ப்பித்திருக்கிறீர்கள் என்றால் ?

ப: சரியல்ல.

கே: 19.06.2015 இரவு முதல் மறுநாள் 20.06.2015 வரை ஷமீல் பாஷா யாருடைய பொறுப்பில் இருந்தால் என்பதோ எவ்வாறு மருத்துவமனைக்கு அழைத்துவரப்பட்டார் என்பதையோ காவலர்களால் கூட கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு ஆவணங்கள் திருத்தி எழுதப்பட்டுள்ளன என்பதனை ஆவணங்கள் மூலம் தெரிந்துக்கொள்வதற்கு வாய்ப்பு இருந்தும் அவைகளை மறைத்து உண்மைக்கு புறம்பாக அறிக்கை சமர்ப்பித்திருக்கிறீர்கள் என்றால் ?

ப: தவறானது.

கே: 19.06.2015 அன்று மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்த்தபோது மூன்று காயங்கள் மட்டுமே விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டிருக்கிற போது அதற்கு பின்னிட்டு

மருத்துவமனையிலிருந்து Abscond ஆன ஷமீல் பாஷா–க்கு ஏற்பட்டுள்ள எந்தவித காயங்களுக்கும் எதிரிகள் பொறுப்பள்ள என்பதை ஊகித்து உணரக்கூடிய ஆவணங்கள் இருந்தும் அவைகளை குறிப்பிடாமல் தாங்கள் பொய் சாட்சி சொல்லியிருக்கிறீர்கள் என்றால் ?

ப: சரியல்ல.

கே: 19.06.2015 இரவு Abscond ஆன ஷமீல் பாஷா 19.06.2015 மதியம் 01.00 மணிக்கு நல்ல முறையில் சென்றவருக்க அன்று மாலை 04.30 மணிக்குள் என்ன நிகழ்ந்தது என்பதை சாட்சிகளிடம் கேட்டு பதிவு செய்யாமல் குற்றப்படுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு சிபிசிஐடி சொல்லிக்கொடுத்த அதே சங்கதிகளை இந்த நீதிமன்த்தில் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் ?

ப: சரியல்ல.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5ம் மற்றும் 6ம் எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார். அனுமதியுடன் தொடர் குறுக்கு விசாரணை.

சாதாரண வழக்கிற்கும் கு.வி.மு.ச.176(1A) வழக்கிற்கும் உள்ள வித்தியாசம் எனக்கு தெரியும். Magistrate Inquiry பொறுத்து மனித உரிமைகள் ஆணையத்தின் வழிகாட்டு நெறிமுறைகள் உள்ளது என்றால் அதை கட்டாயம் பின்பற்ற வேண்டிய சூழ்நிலைய இல்லை.

நம்முடைய உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டின்படி தான் அதை செய்ய வேண்டும். Lockup death வழக்குகளில் உடனடியாக Judicial Inquiry செய்யவேண்டும் என்றால் சரிதான். போலீசார் Lockup–ல் மரணம் ஏற்படுகின்ற விஷயங்களில் போலீசார் விசாரிப்பதை விட நீதிபதி விசாரித்தால் சரியாக இருக்கும் என்ற அடிப்படையில்தான் உயர்நீதிமன்றம் அந்த உரிமையை நீதிபதியிடம் கொடுத்துள்ளது.

Inquiry செய்யும் Magistrate கிட்டடத்தட்ட புலன் விசாரணை அதிகாரி போல்தான் என்றால் சரியல்ல. Judicial Inquiry ல் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை செய்ய வேண்டும் என்றால் சரிதான். ஆரம்ப கட்ட விசாரணையில் நான் பணியில் இல்லை வேறு ஒரு நீதித்துறை நடுவர் அங்கு சென்று விசாரித்தார். அதை தொடர்ந்து நான் பணியாற்றியதால் நானும் Judicial Inquiry–ல் இருந்தேன் என்றால் சரிதான். இரண்டு புகார்களில் வேறுபட்ட தகவல்கள் இருக்கும்போது அதன் முரண்பாடு குறித்து நான் விசாரித்து அறிக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் என் விசாரணையில் சாட்சிகள் கொடுத்த வாக்குமூலத்தில் அடிப்படையில் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். இரண்டு புகார்களிலும் சங்கதிகள் மாறும்போது அது குறித்து நான் கேள்வி எழுப்பியிருக்க வேண்டும் என்றால் சரியல்ல. இரண்டு புகார்களிலும் சங்கதிகள் மாறுபடுவது குறித்து நான் விசாரித்து அறிக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. மருத்துவ ஆவணங்களில் மாறுபட்ட பெயர்கள் இருக்கும்போது அது குறித்து என்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்றால் அதைப்பற்றி நான் குறிப்பிட வேண்டியதில்லை. இறந்தவர் ஒருவர்தான் மருத்துவ சிகிச்சை எடுத்ததும் ஒருவர்தான். ஆம்பூர் மருத்துவமனையில் AR entry

No.90 என்றும், உள்நோயாளியாக இருக்கும்போது அதற்கு Inpatient என்ற column ல் 49130 கொடுத்துள்ளார்கள் என்றால் அதில் அவ்வாறு உள்ளது. வேலூர் அரசு மருத்துவமனையில் Date of admission 22.06.2015 Inpatient எண் புதியதாக கொடுக்கப்பட்டுள்ளது. ஆம்பூர் மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்தார் அதன்பின்னர் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்தார் அதன் பிறகு இராஜீவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு சென்றார். நான் இந்த வழக்கில் விசாரணை செய்தபோது நோயாளி Absconding ஆனது தொடர்பாக மருத்துவரிடம் விசாரித்திருக்க வேண்டும் என்றால் அது என்னுடைய வேலை அல்ல. அது தொடர்பாக நான் மருத்துவரிடம் புகார் பெற்று விசாரித்தேனா என்றால் அது என்னுடைய வேலை இல்லை. அது என்னுடைய வேலை இல்லை என்பது தவறானது என்றும் நான் விசாரணையை சரிவர செய்யாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மருத்துவர்களை நான் விசாரித்தபோது எந்தெந்த மருத்துவர்கள் எந்தெந்த தேதி மற்றும் நேரத்தில் பணியாற்றி மருத்துவம் பார்த்தார்கள் அவர்கள் குறித்த மருத்துவ குறிப்புகளை நான் பரிசீலனைக்கு எடுத்து அதை என்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்றால் புலன் விசாரணையை போல் செய்ய வேண்டியதில்லை என்பதால் எனது அறிக்கையை சமர்ப்பித்தேன். 22.06.2015 க்கு பிறகுதான் நோயாளிக்கு அதிகபட்ச காயங்கள் உருவாகியிருக்கின்றன என்பதை பொறுத்து மருத்துவ ஆவணங்கள் மூலம் நான் கண்டுபிடித்துள்ளேனா என்றால் ஆரம்பத்திலிருந்தே ஏற்பட்ட காயங்களைத்தான் நான் குறித்துள்ளேன். 19.06.2015 முதல்

22.06.2015 க்குள் அதிகபட்ச காயங்கள் எதுவும் இல்லை என்றால் மருத்துவர்களுக்குத்தான் தெரியும். காலங்கடந்து சாட்சிகளை விசாரித்து அறிக்கை கொடுத்ததால் சிபிசிஐடி போலிசார் சொல்லிக்கொடுத்து சாட்சிகள் சாட்சியம் அளித்தார்கள் என்றால் சரியல்ல. சாட்சிகளை நீதிமன்றத்தில் அழைத்து In–camera நடவடிக்கையில் Judicial Inquiry நடத்த முடியாது என்றால் சரியல்ல. சிபிசிஐடி போலீசார் அனைத்து ஆவணங்களையும் பொய்யாக தயாரித்து அதன் அடிப்படையில் நான் அறிக்கை கொடுத்தேன் என்றால் சரியல்ல. என்னுடைய அறிக்கை செல்லாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை**

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 07.50 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.03.06 20:42:43 +0530